**UNDELIVERED ISSUES**

Please re-address
all undelivered issues
of the **Morning Star** to:-
**The Manager,**
" Morning Star",
Vaddukoddai.

# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q/J/29/News/85*

Established: 1841: EASTER ISSUE Published Every Friday

Vol. 145 JAFFNA, FRIDAY, 29th MARCH, 1985 and 5th April, 1985 No. 13 & 14

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

*Subscription*
Inland: Rs. 50/- per year.
FOR ADVERTISEMENTS
*Apply to:*
**The Manager,**
'Morning Star', Vaddukoddai.

168
REFERENCE LIBRARY JAFFNA
24/4/9

*Devotional*

## For Good Friday

[ A personal testimony of
THE LOVE OF GOD ]

*Tune:* ' Amazing Grace "

Jesus loved me ere I knew Him,
Hence my love's due to Him
I bow down worship, honour Him
And praise His Holy Name!

God gave the Gift of Christ my Lord,
That I should be redeemed:
He bore the stripes and shed His Blood
And died on the Cross for me!

Victoriously He rose again
Ascended into Heavn
And sits on the Fathers Right Hand
To intercade for us!

God guards upholds and sustains me
And gives me plenteous grace,
Life's tesrs and trials sore, to win
And meekly seen the Race!

[This little poem was written by one of our subscribers who wishes to remain anonymoes.]

## C. I. S. R. S., Jaffna

The Rev. S. S. Arulampalam, the Director of the CISRS had to resign due to unavoidable personal circumstances and till such time a new Dfrector is appointed. Mr. A. Kadirgamar, Principal, Jaffna College and a former Chairman of the Institute has been appointed Acting Director of the Institute.

Mr. Kadirgamar was invited for a consultation in Bangkok organised by the Association of Christian Institutes for Sociai Concerns in Asia (ACISCA). This consultation took place at the Student Christian Centre in Bangkok from 30th November to 5th December, 1984.

Directors of Study Institutes from India, Indonesia, Japan, Korea, Philippines, Hong Kong, Taiwan, Thailand, Sri Lanka and observers from USA, the Christian Conference of Asia and the World Council of Churches were present. A preliminary assessment of our common concerns in Asia boiled down to the following problems that needed serious consideration and social action:

1. Acute Poverty
2. Pollution and Environment
3. The Status of Women
4. Problems created by multi-national companies
5. Repressive governments and Militarism
6. Problems of ethnic and other minorities.

The conference was chaired by Dr. K. C. Abraham of the Ecumenical Institute Bangalore with the Rev. John England of Hong Kong serving as Secretary.

The Student Christian Centre, the venue of the consultation itself was a worthy experience as a useful and relevant Christian enterprise in the centre of Bangkok. It was well planned architecturally and aesthetically meeting the needs of specially lesser privileged youth of Thailand with excellent facilities for residence, meals, libraries, worship, Christian fellowship, cultural activities and recreation. There was one Sri Lankan doctor resident in the centre. It had a well trained ordained minister as Director and Chaplain.

## Uduvil will Shine

Coming home at the turn of half a century is memorable. Words of the old school song "Uduvil will shine" remained topmost through the Holy week. Stepping out of "Jasmines" on the bright Palm Sunday morning to run into children at the "Eliatamby Memorial", holding high their palm leaves, singing the age old hymns to the march that led to the old church brought boyhood memories The message of Jesus, on that stupid donkey, welcomed by the whole of Jerusalem that turned against Him five days later to one of "Crucify Him" was preached by Sam Annan of the Ashram

Monday and Tuesday's call to remember the events to follow was, by the bare head, bare foot pastor Winslow. Lest we forget Dr. R. Porter's contribution to make the week meaningful and to celebrate the 300th aniversary of that Saint and muscian Johann Sebastian Bach through his work of St. Matthew's Passion Commentary by one who personally relished the 3½ hr. passion play in Germany was touching. The walls of Principal Chelvi's residence echoed the art of the great musician beginning with

"Come, ye daughters, help me wail!
See — whom? — the Bridegroom
See him! how? — like a lamb.
*O Lamb of God, not guilty,*
*On the Tree, the Cross, slaughtered.*
See — what? — see the patience.
*Always found patient*
*Although you were despised.*
Look! — where? — at our guilt".

and ended: "World, get out, let Jesus in!".

The Holy week continued with "Uduvil Shining". A 50 voice choir related the Easter Story through *Thevaram.* How very refreshing! The empty tomb was rejoiced over through *Baratha Natyam.* A great show. Jesus was here, smiling.

"Do this in remembrance of me" was obeyed on Maundy Thursday with Pastor Sugunananthan testfying and serving. Good Friday's solemnity continued to coincide with "the darkness that came upon the whole land".

When the body of Jesus lay in the tomb on Saturday, the church met at the Uduvil graveyard. From early evening little ones, young and old were seen in groups around the graves of their departed, with flowers and candles of affection. A whisper was heard "why weep ye — we are not here, but with the Lord". With reassuring words, the Pastor summed up with the thought, when our journey here is ended. Jesus will say "you are tired — come home".

Easter Sunday dawned early on the 5th hour of the day at Uduvil. Children and teachers with lighted candles wended their way to the church in joyous praising. Songs of Halleluiah were sung, as the angel at the empty tomb in church announced "He is Not here, but is risen"

Uduvil did shine through the church as the light-house.

— K. A.

*Pandateruppu Church*

### Mr. S. G. Selvarajah

The death took place at the General Hospital, Jaffna on the 20th March 1985 of *Sangarapillai George Salvarajah* former Accountrant, Sinnathurai and Brothers, Jaffna. He was a son of the late Mr. and Mrs. Arunasalam Sangarapillai, retired Head Master of Pandateruppu and son in law of Mr. and Mrs. P. J. Thambiratnam of Atchuvely.

The funeral took place at Pandateruppu on Saturday the 23rd March 1985. The funeral service was led by Rev. Sam Thampoe Pastor of the Pandateruppu Church. A tribute to the life and work of the deceased was paid by Rev. S. P, Jeyanesan. The committal rites at the cemetery were performed by Rev. Sam Thampoe. A large gathering was present including members of the Atchuvely Church and other citizens of Atchuvely.

The diseased was Treasurer of the Atchuvely Church at the time of his death. He leaves behind his wife Pathmini, two daughters Gayathiri and Selvini. two brothers and five sisters.

## Censorship

Press censorship imposed on 1-2-85 continues. It has now been extended to include news or articles on the Universities of Sri Lanka.

## Accounts Clerks

There are vacancies for a Senior and a Junior Accounts Clerks at the Diocesan Office of the Jaffna Diocese of the Church of South India. Salary negotiable. Apply indicating qualifications and experience to the Treasurer, Diocesan Office, Vaddukoddai on or before 26th April, 1985.

**Treasurer.**

Diocesan Office,
Vaddukoddai.

## Christa Seva Ashram Chunnakam

The 12th year of the Home Call of Rev. Sevak S. Selvaratnam (Periannan), Founder of the *Christa Seva Ashram* at Maruthanamadam, was marked by a Special Holy Communion Service at the Ashram on 30-3-85 at 7 a. m.

Prior to the Communion Service there was the Chapel Extension Dedication Service at which the Ven. S. D. Horsingston Archdeacon of Jaffna and the Rev. H. R. S. Jeyachandran, Vicar of St. Peter's Methodist Church, Jaffna participated, along with the Sevak Rev. Sam Alfred.

The extension to the main Chapel was dedicated by the Archdeacon and the wings of the Chapel which have been newly constructed by the Rev. H. R. S. Jeyachandran. The renovations made are in memory of Periannan's Parents and his sisters.

A very large number of people attended the Services; despite difficulties of transport.

The Sermon at the Service was preached by the Rev. H. R. S. Jeyachandran. A special choir was in attendance.

**Flash Back**

The foundation stone for the Ashram Chapel was laid in 1939 by Dr. Visser't Hooft. The Dedication Service took place on *17th of December 1940.* The participating priests at the Service were the Revds. E. M. Weaver, D. T. Niles, S. Kulandran and S. S. Selvaratnam.

The speakers on the occasion were *Dr. Jesudason,* of the Christa Kula Ashram at Tirupattur, the founder of the Christian Ashram Movement in India and *Dr. T. Z. Koo* from China, the Asian Secretary of the WSCF.

On the same occasion a new bell, the gift of Mr. and Mrs. Subramaniam Lewis was ceremoniously rung for the first time by the Rev. S. K. Bunker. The Bell is to this day tolled regularly as the angelus at 5 a. m., 12 noon and 6 p. m.

The text which is inscribed over the Ashram chancel is:— "*God so Loved*".

## Unforgettable Bishop Lakshman

"The greatest memorial to him will be to follow the way of life he led, to sesk integrity, to follow uprightness, to care for others in their affliction, and to love and labour for their deliverence". Words uttered by the late Bishop Lakshman Wickremesinghe about Dr. R. L. Hayman, but so applicable to the beloved Bishop himself as he comes vividly before our minds on the eve of his birthday. Which of us, who had the briefest contact with him, could ever forget Bishop Lak's integrity, his sensitivity to people and situations, his total inability to prevaricate or to resort to euphemism, his impish humour which constantly leapt out to confound the pompous, the whole unconventional attitude and lifestyle of a man of God who dared to dream the impossible dream of human brotherhood, justice and peace, and strove to the end for it's realisation.

The intellectual and moral stature of the man was such that he was bound to command the respect of all — even of those to whom his uncompromising integrity made him a thorn in their flesh. But when such a man cares passionately about people — all people — and can communicate that caring in the warmth of friendship offered to village cultivators, to plantation workers, to university students, to humble men and women in all walks of life and all castes, creeds and communities, he inspires love and devotion. He lived close to his Master all his life. He has been described as "a Bishop who was significant on the world scene as well as on the scene of his own diocese", but to many of us the most significant thing about this Bishop was that he reflected Christ's own identification with the powerless and the oppressed.

Bishop Lakshman was not infrequently referred to as a "radical. He could not have taken the term to mean anything less than a compliment. There was no other way for him as a Christian who tried his utmost to follow Christ, than to champion unpopular causes, to indentify himself with the Civil Rights Movement, to speak out against racial discrimination or worker exploitation. In a sermon delivered in London on "Mission, Politics and Evangelism" in 1979, to an English audience, Bishop Lak said: "An alienated church in Asia must opt to foster and support community agitators of this type to serve in rural, urban, coastal and plantation sectors. They are as important for the mission of the church as parish clergy, community workers and evangelists. They may not be listed among the functionaries in the New Testament documents; they are essential functionaries in contemporary Asian Christianity. They are a sign that an alienated Church is serving where the Lord in judging and reshaping contemporary Asian society and the company of Christ's disciples within it. They bear witness to the prophetic function of the Church to make unpopular options and to face the harsh consequences of sufferning and dying as martyrs for the causa of Jesus. They point to a religious vision that empowers people to resist injustice and the powers of evil, rather than simply acquiesce".

There were so many facets to the life and concerns of this extra ordinary man that is imposible to touch on them all in the brief space allotted to a newspaper article. He actively encouraged for instance, women who were struggling to free themselves from ancient shackles. At his insistence the National Christian Council of Sri Lanka set up a Women's Commission to work, along with secular women activists and women's groups of other faiths, for the full participation of women in church and society. He entered into deep dialogue with the clergy of other religions, particularly the Buddhist clergy, and won their friendship and trust. Bishop Lak ever worked to build bridges of understanding at all levels — between Christians and those of other faiths, between Sinhalese and Tamils, between up — country villagers and plantation workers, between the privileged and the under privileged.

Just as Bishop Wickremesinghe was always eager to promote a truly indigenous liturgy for the Church in Sri Lanka, he as also in the latter years, deeply engaged in working out a distinctly Asian theology based on concrete situations in Asia today and relevant to the bontemporary challenges that Asians face. We have it on the authority of Canon Eric James that Bishop John Robinson's illuminating book, "The Truth is Two — eyed", bears the influence of Bishop Lakshmans theological reflections which convinced Bishop Robinson of the importance of viewing God through Eastern as well as through Western eyes.

On his birthday, March 25th, the Kurunegala Diocese of the Church of Ceylon will inaugurate "*The Bishop Lakshman Wickremesinghe Memorial Fund*", the main purposs of which will be to provide tangible support foa the furtherance of the wide range of work and programmes born of the far sighted vision of the late Bishop. A brochure is being specially prepared for the occasion and will contain full details of the projects and programmes that were close to his heart, and hence became our responsibility now, to initiate, continue or complete.

It was the indwelling Christ who gave meaning and purpose and direction to Bishop Laksman's life. And because most of us recognized the fact, I can think of no better conclusion to this inadequate tribute than the words of a poet —:

"Not merely in the words you say,
Not only in your deeds confessed,
But in the most unconscious way
Is Christ expressed.

Is it a beatific smile?
A holy light upon your brow?
Oh, no! I felt His presence
When you laughed just now.

For me 'twas not the truth you taught,
To you so clear, to me so dim,
Bnt when you came to me you brought
A sense of him.

And from your eyes He beckons me,
And from your heart His love is shed,
Till I lose sight of you and see
The Christ instead."

**Anne Abeysekara**

[The Diocese of Kurunagala is commemorating the life and work of Bishop Lakshman Wickremasinghe by inaugurating on 25-3-85, his birthday a fund in his memory. A Prayer Room was opened on the 25th March, in Kurunagala. The Room will become a focus of a cultural centre to carry forward his vision" says the Rt. Rev. Andrew Kumarage, the new Bishop of the Kurunagala Diocese. We thank the Bishop for his letter to us and the enclosures, one of which we are publishing in this special issue.]

— *Ed.*

## 'I Am Four Demolitions Old'

[In an east African city, a young boy learns to measure his age according to his home's destruction]

I stood there and watched
The mighty men emerging from nowhere
They invaded our otherwise tranquil community
Armed with axes and clubs.
They wildly fought with our fragile huts
Striking every blow
Like ones possessed.
I, puzzled, and my playmates bewildered,
We abandoned our games and stood afar
To avoid the flying pieces of wood
As the action gathered momentum
We stood there
Deeply raged but saying nothing
We stood and watched every action of the spectacle
The desolation of our community
By the mighty men
Who had authority clutched in their hands.

As we stood and watched
We remembered
This was not the first time it happened.
We remembered Kaburini
We remembered 'Riverside'
And of course couldn't forget
The classic slum of the Valley
But never before
Did I feel it so passionately
Like this time at Gikomba
Because now I am four demolitions old.

Within no time
The mighty men advanced towards our hut
And there stood poor me
Watching them destroy
My beloved mother's house
Indeed the only property to her name
And therefore immensely valuable
But they mercilessly reduced it into a debris
As it happened
I was all the time wondering:
What crime has my mother committed?
Is to be poor a crime?

There as I stood
Watching the strange men in action
Demolishing my mother's house
Fury and agony convulsed me.
Every time a man lifted his hands
And struck at the carton - paper canopy
Or at the wooden walls
A sharp pain pierced deep into my heart,
I remembered the tragedy of the last demolition
When pueumonia claimed my younger brother's life.
I wished I had the strength to revenge
I wished my father was alive
But poor him
He went to fight for Freedom
And as if he hasn't won yet
He has never come back.

As I stood and watched
I looked up to the sky
Aud beheld the clouds too were gloomy
As if ready to join me in the rage.
The clouds too watched
And almost dropped their tears
To add to the stream
Already flowing from my weary eyes
When the men were done with their work
I started wondering in my mind:
What plans have the rich for this area
So that the houses of the poor
Should be thus demolished?

Now the day is far spent
And the night is drawing nearer
Yet we haven't succeeded
In fishing our blankets, pots and other valuables
From the huge heaps of the debris.
I also see the clouds
As if they too could not hold anymore
Are about to shed their tears.
As for me and my beloved mother and sister
It is no time to cry
For tonight it is but
One more of the numeroue occasions
When we sleep in open air.

**Sam Kobia**

(Sam Kobia from Kenya is programme secretary for urbon rural mission with the World Council of Churches.)

Courtesy: **One World**

## The Christian Conference of Asia and the NCC

At the General Assembly of the CCA held recently, the following represented the NCC of Sri Lanka. The Rt. Rev. D. J. Ambalavanar, Mrs. Carol Garnier Mr. J. Lionel Silva and Miss Chrishanthi Salgado (youth delegate).

The following were nominated to be considered for selection as Youth Stewards at the Assembly:— Messrs Devanandam Anandarajan, Alex de Alwis, C. K. Wickremasinghalage and Misses Bernice Balasinghe, and Mahiri de Silva.

The NCC Youth Conference is scheduled for the last week of November this year. The Rev. Rohan Wijesinghe NCC University Chaplain (Peradeniya) will implement the NCC — IYC Programme of 1985.

The NCC sponsored Ecumenical Church Leaders' Conference is scheduled from the 5th to the 10th of August this year.

# உதயதாரகை
UTHAYATHARAKAI
Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது

" நீதி ஜனத்தை உயர்த்தும் ; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம் "

மலர் 145 ] 29-3-85, 5-4-1985 [ இதழ் 13, 14

## உயிர்ப்புத் திருநாள்

உலகம் உய்யக் கிறிஸ்து பெருமான் உயிர்த்தெழுந்தார் என்பதை நினைவுகூர்ந்து, இப்பெருநாளைக் கொண்டாடும்போது, உயிர்த்தெழுந்த நம்பெருமான், இன்றைய பயங்கரச் சூழ்நிலையில் நமக்களிக்கும் செய்தியென்ன என்பதை சிந்திப்பது நல்லது.

கிறிஸ்தவ சபை கொண்டாடிவரும் விழாக்கள் யாவற்றிலும் பூர்வீகமானதும், அதின் ஆதிவிசுவாசத்திற்கு நெடுங்காலமாய் நடுநாயகமாயிருந்து வருவதும், உயிர்ப்புத் திருவிழாவே. மேலும், ஞாயிறுதோறும் நாம் இறைவழிபாட்டிற்கு வரும்போது, இந்த நாளில் கிறிஸ்து பெருமான் மெய்யாகவே உயிர்த்தெழுந்தாரென்ற நம்பிக்கையுடன் வருகிறோம். உயிர்ப்பத்திருநாள் திருச்சபையின் மாபெருந்திருவிழா.

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் ஒரு புதிய மனுக்குலத்தின் தொடக்கமாகும். இப்புதிய மனுக்குலத்தின் முதல் மனிதனாக இயேசு கிறிஸ்துவே அமைகிறார். எம்பெருமான் மரணத்தையேற்றபோது, பழைய மானிடம் அவருக்குள் இறந்தது. அவர் உயிர்புற்றெழுந்தபோது, புதிய மானிடம் அவருக்குள் பிறந்தது. இயேசுவின் பேரிலுள்ள விசுவாசத்தால் நாம் புதிய மானிடத்தில் இணைக்கப்படுகிறோம்.

இயேசுபிரான் தொடக்கிவைத்த இப்புதிய மானிட இனத்தைச் சேர்ந்தவர்களாக நாம் பதிவு செய்யப்படுகிறோம். 'அவர் மரணமடைந்ததுபோலவே நாமும் அவரோடு இணைக்கப்பட்டு மரணமடைந்திருக்கிறோமென்றால், அவர் உயிர்த்தெழுந்ததுபோல நாமும் அவரோடு இணைக்கப்பட்டு உயிர்த்தெழுவோம்.' ஆகவே, அவருடைய மரணத்தினாலும் உயிர்ப்பினாலும் நாம் மீட்கப்பட்டு, ஒரு புதிய மானிடத்தில் இணைக்கப்பட்டிருப்பது ஒரு முடிந்த செயலாகும் என்பதை அறிக.

இன்றைய உலகில் நாம் ஆற்றவேண்டிய பணியை நோக்கும்போது, அவரது மரணத்திலும் உயிர்ப்பிலும் நாம் இணைந்து பணியாற்றவே அழைக்கப்படுகிறோம் என்பதை அறிகிறோம். மக்கள் எங்கு அறியாமையில் மூழ்கிக் கிடக்கின்றனரோ, எங்கு வறுமையிலும், பசியிலும், நோயிலும் சிக்கித் தவிக்கின்றனரோ, எங்கு நசுக்கப்படுகின்றனரோ, எங்கு அநீதியினால் அடக்கப்படுகின்றனரோ அங்கெல்லாம் 'அவருடைய மரணத்தின் சாயலை' அல்லது 'சிலுவையின் சாயலை' நாம் காண்கிறோம். அந்தச் சாயலில் கிறிஸ்துவுடன் நாம் இணைந்து மக்களின் நலனுக்காகப் பாடுபடும்போது, அங்கு உயிர்த்தெழுதலின் சாயலாகிய பெரிய மீட்பு உண்டாவதை நாம் காண்பது நிச்சயம். இவ்வுயிர்த்தெழுதலின் சாயலில் இணைக்கப்படும் பெரும்பேறு நமக்கு அளிக்கப்படுகிறது. இத்தகைய அருளைப் பெற்ற இயேசுவின் அடியார், தாம் சென்றவிடமெல்லாம் அன்பை ஊற்றிக்கொண்டும், ஒளியை வீசிக்கொண்டும் அன்புப் பணியாற்றி வந்தனர்.

உயிர்த்தெழுந்த இயேசுவே இவ்வடியாரின் உள்ளங்களில் செயலாற்றி வந்தார். எவ்வளவு அமைதியாய் மறைமுகமாய் உயிர்ப்பு நிகழ்ச்சி நடந்தேறியதோ, அவ்வளவு மறைவாகவும் அமைதியாகவுமே இயேசுபிரானின் ஆவியால் நடத்தப்படுவோரின் பணிகள் இன்றும் நடந்தேறுகின்றன என்ற உண்மையை நாம் அறிவது அவசியம்.

பாவத்தில் உழன்று, நம்பிக்கையற்று செயலிழந்து இருப்போரை, இயேசுபெருமான் அரவணைத்து புத்துயிர் அளிக்கிறார். வாழ்க்கையில் ஏற்படும் புயல்கள் மத்தியில், மனஞ்சோர்ந்து பயந்து அலறும் வேளையில், நாம் எதிர்பாராத வகையில் புயலை அடக்கி, உயிர்த்தெழுந்த ஆண்டவர் அமைதியை வழங்குகிறார். இவ்வித உதவிகளை உயிர்ப்புற்ற ஆண்டவரின் அருளால் இன்றும் நாம் பெற்று வருகிறோமல்லவா?

கிறிஸ்துபெருமான் நாள்தோறும் உயிரற்ற ஆன்மாக்களை உயிர்த்தெழும்பச் செய்கிறார். பல இதயங்களில் புதைக்கப்பட்ட அன்பை உயிர்ப்படையச் செய்கிறார். பல உள்ளங்களில் அடக்கம் பண்ணப்பட்ட நம்மீட்பரின் ஆவி, இன்றும் உயிர்ப்படைந்து ஒளிர்கின்றது. உயிர்த்தெழுந்த நிகழ்ச்சி நாள்தோறும் நடைபெறும் நிகழ்ச்சி. இதுவே, உலகத்தை உயிருடன் வாழச் செய்கின்றது.

நேற்றும் இன்றும் என்றும் மாறாத நம் ஆண்டவர், இன்றும் நம்மருகில் ஜீவனுள்ளவராய் நின்று நம்மை வழிநடத்தி வருகிறார் என்பதை அறிந்துணர்ந்து, நாம் நிம்மதி பெறும் நித்திய வீடு அவரே என்பதை நம்பி, அவரோடு தங்கி வாழ ஆண்டவரின் அருளை நாடி வாருங்கள்.

செய்தி

## கொழும்புச் சபை: ஓய்வுநாட் பாடசாலை நாடகப் போட்டியில் முதற்பரிசு பெற்றது

கொழும்புப் பகுதியிலுள்ள கிறிஸ்தவ கலாமன்றத்தினர் முதன் முறையாக, கடந்த மாதம் 23 ஆம் திகதியன்று (23-3-85) நடாத்திய ஓய்வுநாட் பாடசாலை நாடகப் போட்டியில் 12 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகள் பிரிவில் நமது கொழும்புச் சபை ஓய்வுநாட் பாடசாலைப் பிள்ளைகள் முதற் பரிசைப் பெற்றனர்.

இந்நாடகம், ஈஸ்டர் திங்கள் எதிர்வரும் 8-4-85 அன்று ரூபவாகினி தொலைக் காட்சியில் இடம் பெறுமென்று அறிகிறோம்.

கொழும்புச் சபை ஓய்வுநாட் பாடசாலைப் பிள்ளைகளுக்கு எங்கள் வாழ்த்துக்கள்.

## இயேசுவை நான் சிலுவையில் அறைகிறேனா?

ஒருவரும் சவாரி செய்யாத ஒரு கழுதைக் குட்டியின்மேல் ஏறி, இயேசு எருசலேமினுள் நுழைந்தார் (மா. 11 ; 2). ஒருவருக்கும் அர்ப்பணிக்காத என் மனமாகிய கழுதையை அடக்கி அவர் ஏறிச்செல்ல இடம் வைக்கிறேனா? எந்த வழியில் செல்ல விரும்புகிறேன் நான். மகிழ்ச்சியும், சாந்தமும் நிறைந்த நித்திய வழியிலா, வம்பும் தும்பும் நிறைந்த துக்க வழியிலா?

அத்தி மரம் துளிர்விடும் போது சிறு முளைகள் தோன்றும். இவைகள் உதிர்ந்த பிறகு அத்திப் பழங்கள் உண்டாகும். இலைகள் மட்டுமே உள்ள மரத்தில் பழங்கள் தோன்றா. 'கனியற்ற' சமய வாழ்வை நடத்தி வருகிறேனா? 'நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லோரும் அப்படியே கெட்டுப்போவீர்கள்' (லூ. 13:5-9) என்று இயேசு சபிக்கத்தக்க வாழ்வை மேற்கொண்டுள்ளேனா?

பிலாத்து ஆண்டவரிடம் எவ்விதக் குற்றமும் காணவில்லை, என்று அறிந்தபோதும் மரணத்திற்கு அவரை ஒப்புக்கொடுத்தான். ஆனால், மக்கள்முன் தான் குற்றவாளியல்ல என்று தன் கைகளைக் கழுவினான் (மத். 27 ; 24). அதுபோல நான் சிலுவைப்பாடுகளைத் தியானிக்காத, அதற்கும் எனக்கும் சம்பந்தமில்லை என்றால் என் பாவம் போகுமா? அதை நான் உணர்ந்தேனா?

'உமது நிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும் நான் இடறலடையேன்' என்ற பேதுரு (மா. 14 : 29-31; மத். 26: 33-35) சேவல் கூவுவதற்கு முன்பு மூன்று தரம் மறுதலித்தான். காலத்திற்கேற்ப, அற்ப காரியங்களுக்காகவும், வீண் பெருமிதத்திற்காகவும், கஷ்டம் வரும் நேரத்திலும் கோழையைப்போன்று அவரை மறந்து, மறுதலிக்கிறேனா?

அவருடைய உடல் எனக்காக நொறுக்கப்பட்டது. அவருடைய இரத்தம் எனக்காக ஊற்றப்பட்டது. இதுதான் அவர் செய்த புது ஒப்பந்தம் (மா. 14 : 24). அவருடைய மரணத்தால் எனக்குப் பாவத்தினின்றும் சாவினின்றும் விடுதலை கிடைத்தது. எனக்காகப் பிணைபட்டு சிலுவைக்குச் சென்றார் என அறிந்து நடக்கிறேனா?

— நிர்மலா பாட்ரிக்

மரணம்

## செல்வி அருளாச்சி இராமலிங்கம்

மானிப்பாய் சபையைச் சேர்ந்தவரும், உடுவில் மகளிர் கல்லூரி இளைப்பாறிய ஆசிரியையுமாகிய செல்வி அருளாச்சி இராமலிங்கம் அவர்கள் இம்மாதம் 8 ஆம் திகதி காலமானார். இவர் காலஞ்சென்ற ஆசிரியர் ஞானசம்பந்தர் அவர்களின் சகோதரியாவார். இவர் தமது 75 ஆம் பிறந்த நாளை இம்மாதம் 7 ஆம் திகதி கொண்டாடினார். அன்று மானிப்பாய்ச் சபையின் மகளிர் மன்றத்தினால், சுதுமலையில் இவர் வசித்த இல்லத்தில் செபக் கூட்டம் நடத்தப்பட்டது. அடுத்த நாள் மாரடைப்பினால் மறுமை யெய்தினார்.

இவரின் இறுதியாராதனை சுதுமலையில் அருள்திரு. டி. ஆர். அம்பலவாணர் அவர்களால், அருள்திரு. சேவக் சாம் அல்பிறட், நாவலி ஊழியன் திரு C. T. ரோபெட்ஸ் அவர்கள் உதவியுடன் நடாத்தினார். உடுவில் மகளிர் கல்லூரி முன்னாள் அதிபர் திருமதி S.T. சோமசுந்தரம் இரங்கலுரை வழங்கினார். இவர் தமது இரங்கலுரையில், "செல்வி இராமலிங்கம், தன் பள்ளிக்கூட படிப்பை முடித்ததும், வேலூர் மருத்துவ கல்லூரியில் ஓராண்டு கற்றார். அத்தருணம் அவரது தாயார் நோய்வாய்ப் பட்டிருந்ததால், மருத்துவப் படிப்பைத் தொடராமல் திரும்பி வந்து தாயாருக்கு உதவியாயிருந்தார். பின்னர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் சேர்ந்து பயிற்சி பெற்றார். இவரது வாழ்க்கையில் காணப்பட்ட தெய்வபக்தி, கண்ணியம் கட்டுப்பாடு, 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற உறுதியான மனத்துடன், இறுதிவரை பணி செய்தார்", என்று கூறினார். வண. அம்பலவாணர் அவர்கள் அருளுரை வழங்கினார். உடுவில் மகளிர் கல்லூரி மாணவரும், திருமதி ஜெயமலர் அரியராசாவும் சிறப்புப் பாடல்கள் பாடினர்.

மானிப்பாய் சபைக் கல்லறைத் தோட்டத்தில், வண. அம்பலவாணர் அவர்களால் நல்லடக்க ஆராதனை நடத்தப்பட்டது.

## ஆண்டவரே, எம் ஆண்டவரே

உமது பெயர் உலகெங்கும் எவ்வளவு வியப்புக்குரியது! நீர் உம் மகிமையை வானங்களுக்கு மேலாக விளங்கச் செய்தீர்.

உம்முடைய வானங்களை, உம் படைப்புகளை, நீர் அமைத்த நிலவை, விண்மீன்களைக் காணும்போது;

மனிதனை நீர் ஒரு பொருட்டாக நினைக்க அவன் யார்? அவனைப்பற்றி அக்கறை கொள்ள அவன் யார் என்று சொல்லத் தோன்றுகிறது!

வான தூதரைவிட அவனைச் சிறிது தாழ்ந்தவனாகப் படைத்தீர்; மாண்பையும் பெருமையையும் அவனுக்கு முடியாகச் சூட்டினீர்.

உம் படைப்புகள் அனைத்தின் மீதும் அவனுக்கு அதிகாரம் தந்தீர்; அனைத்தையும் அவனுக்குக் கீழ்ப்படுத்தினீர்.

ஆடு, மாடுகள், வயல்வெளியில் உலாவும் விலங்குகள் அனைத்தும் அவனுக்குப் பணியச் செய்தீர்;

வானத்துப் பறவைகள், கடலில் வாழும் மீன்கள்: அதில் நீந்தும் அனைத்தையும் அவனுக்குக் கீழ்ப்படுத்தினீர். ஆண்டவரே, எம் ஆண்டவரே, உலகெங்கும் உமது பெயர் எவ்வளவு வியப்புக்குரியது!

— சங்கீதம் : 8.

## சிலுவைமீதொரு மனிதன்

இரவிலோ பகலிலோ என்றனைச் சூழவே
அசைவிலா அமைதியே அடுத்திடும் போதிலே
சேய்மைப் புலம்பல் செவிப்புலம் பட்டிடும்;
முதன்முறை கேட்டேன், முடுகியே எழுந்து
தேடினேன் ஓடினேன் தெருவுக்கு மப்பால்;
சீரார் மனிதனைச் சிலுவையில் கண்டேன்,
கைகளில் கால்களில் ஆணியுங் கண்டேன்,
கசிகிற இரத்தமும் காதலுங் கண்டேன்;
'ஐயகோ, ஐயனே, அங்கிருந்துன்னை
விடுவிப்பனெ' ன்றே விரைவுடன் சென்று
கால்களின் ஆணியைக் கழற்றிடத் தொட்டேன்;
'அப்பப்ப நில' லென் (று) அன்புடன் சொன்னான்,
'ஆணியைக் கழற்றல், ஆணியைக் கழற்றல்,
அவனியில் வாழ்ந்திடும் ஆண்களும் பெண்களும்,
சிறுவரும் யாவரும் சேர்ந்துமே வந்தால்,
ஆணியைக் கழற்றலாம் அல்லது வேண்டா
என்றவன் சொன்னதும் ஏங்கியே நின்றேன்
'ஐயவுன் புலம்பல் அசைக்குதென் நெஞ்சை
என்னவோ செய்தல்?' என்று நான் கேட்டேன்
உலகெல்லாம் சென்று நீ ஊரெலாங் கூவி
அலகிலா நோவுடன் ஆங்கொரு மனிதன்
சிலுவையில் தொங்குகின்றானெனச் சாற்றுவாய்
என்றனன், நெஞ்செலாம் இளகிய தன்றே!

[ஆங்கிலக் கவிதை: The Man on Cross தமிழாக்கம்: பொ. அ. ச.]

## மெய்வாழ்வு தரும் அப்பம்

(யோ. 6:22-40)

இயேசு பெருமான் ஐயாயிரம் பேர்க்கு, அற்புதமாக உணவளித்த நிகழ்ச்சியைக் கடந்த தியானத்தில் கவனித்தோம். இப்போ, மெய்வாழ்வு தரும் அப்பம் இயேசுவே' என்ற கருத்து, இன்றைய வேதப் பகுதியில் விளக்கப்படுவதைக் கவனியுங்கள்.

இயேசு கிறிஸ்து அற்புதமாய்த் தமக்களித்த அப்பங்களை வயிறார உண்ட மக்கள், தங்கள் உலக வாழ்விற்குரிய தேவைகளை இவ்வற்புத மனிதனாகிய இயேசுபிரானிடம் தொடர்ந்து பெறலாமென்ற நோக்குடன் அவரைத் தேடி கப்பர்நகூமுக்கு வந்தனர் (வ. 24); அவர்களைக் கண்ட எம்பெருமான், அவர்களின் உள்ளக் கிடக்கையை அறிந்தவராய், அழிந்துபோகும் உணவிற்காக உழைக்கவேண்டாம், முடிவில்லாத வாழ்வளிக்கும் நிலையான உணவிற்காக, இறைவனுக்கேற்ற செயல்களைச் செய்யுங்கள். அவ்வாழ்வை உங்களுக்கு அருளும்படி, மனிதகுமாரனாகிய எனக்கு இறைவன் தம் அதிகாரத்தை அளித்தார் (வ. 27) எனச் சொன்னார்.

இறைவனுக்கேற்ற செயல்களைச் செய்யத் தாங்கள் செய்ய வேண்டியதென்ன? என்று வினவிய அம்மக்களுக்கு, 'இறைவனால் அனுப்பப்பட்ட தம்மை விசுவாசிப்பதே அவருக்கேற்ற செயல்' (வ. 29) என விளக்கினார். இயேசு அளித்த இரத்னச் சுருக்கமான இப்பதில், அம்மக்களின் ஆவலைத் தூண்டிவிட்டது. அதனால், அவர்கள் இயேசுவை நோக்கி, நீர் மற்றவர்களிலும் பார்க்க உயர்வான ஓர் அற்புதச் செயலைச் செய்தால் தானே, நாங்கள் உம்மில் விசுவாசங் கொள்ள முடியும். மோசேயும் நம்முன்னோர்க்குப் பாலைவனத்தில் உண்பதற்கு வானத்திலிருந்து மன்னாவை அருளினாரே! (வ. 31) என்றனர். (சங். 78:24 காண்) அதற்கு இயேசு, 'உங்கள் முன்னோர்க்கு வானத்திலிருந்து உணவு அருளியவர் மோசேயல்ல, என் தந்தையே. அவர் அருளிய அப்பமே, உலகிற்கு வாழ்வு அளிக்கும் 'உயிருள்ள அப்பம்' (வ. 32, 33) என்றார்.

இயேசு அளித்த இப்பதிலைக் கேட்ட அம்மக்கள், 'உயிருள்ள அப்பத்தை'ப் பெறவேண்டுமென்ற ஆவலுடன், 'ஐயா, இந்த அப்பத்தையே எப்போதும் எங்களுக்குத் தாரும்' (வ. 34), என்று வாஞ்சையுடன் வேண்டினர். அவர்களின் பேராவலைக் கண்ட எம்பெருமான், வாழ்வு தரும் அப்பம் நானே', என்னிடம் வருகிறவனுக்குப் பசியேயிராது, என்னில் விசுவாசங் கொள்பவனுக்குத் தாகமேயிராது (வ. 35). நீங்களோ, என்னைக் கண்டும் விசுவாசிக்கவில்லை. ஆயினும், கடவுளின் அருளினால் அனுப்பப்பட்ட அனைவரும் என்னிடம் வருவார்கள். என்னிடத்தில் வருகிறவனை நான் ஒருபோதும் தள்ளிவிடேன் (வ 37). என்னில் விசுவாசங் கொள்பவனுக்கு நிலையான வாழ்வை அளித்து, இறுதிநாளில் அவனை உயிர்ப்பிக்க வேண்டுமென்ற, என் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றவே நான் வந்தேன்' (வ. 40) என்றார்.

### சிந்தியுங்கள்:

இயேசுபிரானைத் தேடிய அம்மக்கள் தம் உடலுக்குரிய தேவைகளையே மேலாகக் கருதி, அவரை நாடினர். இன்றும், நயமிற்பலர் சுயநல நோக்குடனேயே இயேசுவை வழிபடுகின்றனர். இது கிறிஸ்துவின் போதனைக்கு முரணானது. எவன் தன் சுயநலத்தையே நாடுகின்றானோ அவன் அரை மனிதன்; முழு மனிதனல்ல. நமது ஆன்மப் பசியை இவ்வுலக காரியங்களினால் திருப்திசெய்யலாமென நினைக்கிறீர்களா? அதனை முற்றாகத் தீர்க்கக் கூடியவர், வாழ்வு அளிக்கும் அப்பமாகிய இயேசுவே. அவரே நம் பசியாற்றும் 'மன்னா', ஆகவே, 'நீங்கள் அப்பமல்லாததற்காகப் பணத்தையும், திருப்தி செய்யாத பொருளுக்காக உங்கள் பிரயாசத்தையும் செலவழிப்பானேன்?' (ஏசா. 55:2).

ஆயினும், மனிதன் இவ்வுலகத் தேவைகளைக் குறித்து அக்கறை காட்டப்படாதென இயேசு கூறவில்லை. 'அன்றன்று எங்களுக்கு வேண்டிய உணவை அன்றன்று எங்களுக்குத் தாரும்' (லூ. 11:3) என அவரே கற்பித்தார். நாம் பிழைப்பதற்கு உணவு தேவைதான். ஆனால், 'மனிதன் வாழ்வது அப்பத்தினால் மட்டுமன்று' (லூ. 4:4; உபா. 8:3), ஆகவே நமது நிலையான வாழ்விற்கு 'வாழ்வு அளிக்கும் அப்பம்' தேவை என்பதை அறிக. வாழ்வு அளிக்கும் அப்பமாகிய இயேசு, தம்மையே மனுக்குலத்தின் வாழ்விற்காகத் தந்தார். இப்புதிய வாழ்வை நாம் பெறவேண்டியது அவசியமல்லவா? கடவுளின் தயவைப் பெறுவதற்கு அவரிடம் நாம் வரவேண்டும். ஒழுக்கநெறியில் நாம் வாழ்ந்தால் போதுமென நினைக்கப்படாது. தம்மிடம் வரும் எத்தகைய பாவியையும் இயேசுபிரான் தள்ளவே மாட்டார்.

கடவுளால் அனுப்பப்பட்ட மனிதகுமாரனாகிய இயேசுவில் விசுவாசங்கொள்வதே கிறிஸ்துவுக்குகந்த நெறியாகும். அவருடன் நல்லுறவு பூண்டு வாழ்வதே கிறிஸ்தவ வாழ்வு (ரோ. 3:28); இம் முழு வாழ்வைத் தரும்படி பணிவுடன் ஆண்டவரை வேண்டுங்கள்.

### செபம்:

இயேசுவே, பாவிகளிற் பிரதான பாவியாகிய நான் உம்மிடம் பணிவுடன் வருகிறேன். என்னை ஏற்றுக்கொள்ளும். மெய்வாழ்வை எனக் கீந்தருளும். சுயநலத்திற்காகவே உம்மை நாடாமல், உம்மில் உண்மையான அன்புகொண்டு உம்மை விடாது சேவிக்க அருள் தாரும். — ஆமென்

## காட்சி கண்டோர் சாட்சி

'இந்த இயேசுவை தேவன் எழுப்பினார்; இதற்கு நாங்களெல்லாம் சாட்சிகளாயிருக்கிறோம்' (அப் 2:32).

இன்று உலகில் இயேசு கிறிஸ்து ஒரு பெரியார், உலகப் பெரியார் யாவரிலும் சிறந்தவர் என்று பலர் ஒப்புக்கொள்கின்றனர். ஆனால், அவர் ஆண்டவர் என ஒப்புக்கொள்ள மறுக்கின்றனர். அவர் உயிருற்றெழுந்தார் என்று அவருடைய அடியார்கள் பிற்காலத்தில் எழுதி வைத்தார்களே ஒழிய உண்மையில் அவர் உயிர்பெற்றெழவில்லை என்று அவர்கள் கூறுகிறார்கள்.

இயேசு பெருமான் உயிர் பெற்றெழாவிட்டால் கிறிஸ்தவ சமயம் நிலை நிற்க எவ்வகையான ஆதாரமும் இல்லை. அவர் உயிர் பெற்றெழுந்தார், அதற்கு நாங்களே (கிறிஸ்தவர்களே) சாட்சி. இதோ சில ஆதாரங்கள்.

### வரலாறு சொல் மரபானது

நம் இறைவனார் உயிருற்றெழுந்து காட்சி அளித்த வரலாறு கண்கண்ட சாட்சிகளால் சொல் மரபில் நிலவின. இயேசுவின் கடுந்துன்பங்கள், சாவு ஆகியவற்றின் விவரங்களைப்போல், உயிர்பெற்ற நிகழ்ச்சி, நற்செய்தி நூல்கள் தொகுத்து எழுதப்படு முன்பே தொகுத்து எழுதப்படவில்லை. ஏனெனில், ஒவ்வொரு தனி வரலாறும் இறைவனார் உயிர்பெற்றெழுந்த நிகழ்ச்சிக்கு சான்று அளிப்பதாயிருந்தது. ஆகவே, அவற்றைத் தொடர்ச்சியாக தொகுத்து எழுத தேவையில்லாமல் போயிற்று. தொகுத்து எழுதியபோது நற்செய்தி நூல்களில் முரண்பாடுகள் காணப்பட்டன.

### முரண்பாட்டில் வெளிப்பாடு

நம் நற்செய்தி நூற்களில் உயிர்த்தெழுதல் நிகழ்ச்சிப் பகுதிகளில் பல தொடர் விவர முரண்பாடுகள் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக:

1. கல்லறைக்குள் ஓர் இளைஞன் உட்கார்ந்திருந்தான் என மார்க்கு 16:15இல் காணப்படுகிறது.

2. தெய்வதூதன் ஒருவன் கல்லறை வாசல் கல்லின்மேல் உட்கார்ந்திருந்தான் என மத்தேயு 28:2இல் கூறப்பட்டுள்ளது.

3. இரண்டு மனிதர்கள் கல்லறையின் அருகே நின்றார்கள் என லூக்கா 24:4இல் கூறப்பட்டுள்ளது.

4. இரண்டு மனிதர்கள் கல்லறைக்குள் இருந்தார்கள் என யோவான் 20:12இல் கூறப்பட்டுள்ளது.

இப்படி பல முரண்பாடுகள் உள. இந்நிகழ்ச்சிகள் சொல் மரபின் (various sources) முதல் நூற்றாண்டில் வெவ்வேறு இடங்களில் நிலைபெற்றிருந்தமையால் இவ்வித முரண்பாடுகள் காணப்படுவது இயல்பே. அப்படி முரண்பாடுகள் இல்லையாயின் நற்செய்தி நூலாளர்கள் கதையைப் புனைவதற்காக கூடி சேர்ந்து ஒன்றுபோல் விவரங்களை எழுதினார்கள் என்று சொல்ல வேண்டியதிருக்கும்.

### ஒற்றுமையில் வெளிப்பாடு

நான்கு நற்செய்தி நூற்களும் கல்லறை வெறுமையாயிருந்தது. இயேசு பெருமானின் உடல் அங்கில்லை என்று கூறுவதில் ஒத்திருக்கின்றன. மார்க்கு நூலைத் தவிர மற்ற மூன்று நற்செய்தி நூற்களும் உயிருடன் எழுந்த இறைவனார் பல வேளைகளில் தம் சீடர்களுக்கு காட்சி அளித்ததாகக் கூறுவதில் ஒத்திருக்கின்றன.

மேலை நாடுகளில் இவ்விவரங்களின் உண்மையை அறியவேண்டுமென்று அறிஞரில் சிலர், தங்களுக்குத் தெரிந்த இயல் அறிவுக்கு ஒவ்வாத யாவையும் பொய்யென முடிவு கட்டினார்கள். எடுத்துக்காட்டாக, கதவு பூட்டியிருந்த போது அதைத் திறக்காமலே அறையினுள் வந்து காட்சி அளித்த இறைவனின் உடல் தொட்டு உணரக்கூடியதாயிருக்க முடியாது என்றார்கள், மனுவுருவெடுத்த இயேசு, தம் அடியாரின் நம்பிக்கையை உறுதிப்படுத்த காட்சியளித்தார் எனின், அவரைத் தொட்டுணரும் முறையில தம் உடலை மாற்றிக்கொள்ள அவரால முடியும் என்பதே நமது பதிலுரை.

### காட்சி கண்டோர் சாட்சி

நீங்கள் நீதிக்கு மாறாக சிலுவையில் அறைந்து கொல்வதற்கு ஒப்புக்கொடுத்த இந்த இயேசு பெருமானை கடவுள் உயிரோடு எழுப்பினார். அதற்கு நாங்கள் சாட்சிகள் (அப். 2ஆம் அதி) யூதருக்குப் பயந்து தன் உயிரைக் காத்துக் கொள்ள இயேசுவை மறுதலித்த பேதை மனங்கொண்ட பேதுருவின் வீர முழக்கம் இது. இதன் மர்மம்தான் யாது?

'கிறிஸ்து எழுப்பப்படவில்லையென்றால் எங்கள் பிரசங்கம் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா (1 கொ. 15:14). கிறிஸ்துவை அறிக்கையிடும் அனைவரையும் கொன்று குவிப்பேன் எனக் கொக்கரித்துச் சென்ற புனித பவுலடிகளின் இவ்வறிக்கையின் மர்மம்தான் யாது?

கெத்செமனே தோட்டத்தில் மேலாடையை எறிந்துவிட்டு நிர்வாணமாய் ஓடிய மார்க்குவின் வீர முழக்கத்திற்குக் காரணம் யாது?

உயிருற்றெழுந்த இறைவனைக் கண்டார்கள், தொட்டு துய்த்து உணர்ந்தார்கள், சாட்சி பகர்ந்தார்கள். இவர்கள் கண் கண்ட சாட்சி. இச்சாட்சி இன்றும் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

இயேசு பெருமான் உயிர்பெற்றெழாவிட்டால் அவர் உண்மைக்காக உயிர்விட்ட ஒரு பெரியாரே. அவர் உயிர்பெற்றெழுந்தது உண்மை. மனிதனுக்காக மனிதனான கடவுள்.

அவர் கல்லறையில் இல்லை. அவர் உயிர்த்தெழுந்தார். அவர் நமக்கு முன்னே (கலிலேயாவுக்கு) செல்கிறார். கல்லறையினுள் இருந்தல்ல, வெளியே நின்று நம்மை பெயர்சொல்லி அழைக்கிறார். 'ரபூனி' என அவர் பாதத்தில் விழுந்து பணிவோம்.

— M. S. ஆராடி, மதுரை.

## நன்றி செலுத்தும் ஆராதனை

மானிப்பாய்ச் சபையைச் சேர்ந்தவரும், ஆலைக்கோட்டைச் சபையின் முன்னாள் செயலாளரும், உடுவில் மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆகிய கல்லூரிகளில் ஆசிரியராயிருந்தவருமாகிய காலஞ்சென்ற செல்வி அருளாச்சி இராமலிங்கம் அவர்களின் வாழ்க்கைக்காக நன்றி செலுத்தும் ஆராதனை, மார்ச் 31ஆம் திகதி (31-3-84) காலை 10.00 மணிக்கு அருள்திரு. டி. ஆர். அம்பலவாணர் அவர்கள் தலைமையில் மானிப்பாய் ஆலயத்தில் நடைபெற்றது.

உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் செல்வி C. V. செல்லையா அவர்கள், இரங்கலுரை வழங்கினார். இவர் தமது உரையில், 'செல்வி இராமலிங்கம் அவர்கள் எப்போதும் சுயநலங் கருதாது பிறர் நலங்கருதும் பெரும் மனப்பான்மை கொண்டவர். எங்கு உதவி தேவையோ, அங்கு நின்று அயராது உழைக்கும் பெரும் பண்புடையவர். கண்ணியமும் கட்டுப்பாடும் உள்ளவர். மாணவிகளுக்கு ஓர் முன் மாதிரியாயிருந்து அவர்களை நல்வழியில் நடத்தி வந்தார். எப்போதும் மலர்ந்த முகத்துடன், பக்தி நிறைந்து வாழ்வை நடாத்தி வந்தார்', என்று கூறினார். வண. அம்பலவாணர் போதகர் அவர்கள் அருளுரை வழங்கினார். உடுவில் மகளிர் கல்லூரி பாடகரும், மானிப்பாய்ச் சபைப் பாடகரும் சிறப்புப் பாடல்களைப் பாடினர். வேதப் பாடங்கள் உடுவில் மகளிர் கல்லூரி ஆசிரியர் செல்வி நமசிவாயம் அவர்களாலும், மானிப்பாய் சபை செயற்குழு அங்கத்தினரில் ஒருவராகிய திரு. W. J. J. மேதர் அவர்களாலும் வாசிக்கப்பட்டது.

ஆராதனையின்பின் அனைவர்க்கும் தேநீர் விருந்துபசாரணை நடத்தப்பட்டது.

---

## தென் இந்திய திருச்சபை யாழ்ப்பாணத் திருமண்டிலத்தின் 38-வது பேரவையில் பேராயர் ஆற்றிய பேருரை

பேராயரவர்கள் ஏசாயாதீர்க்கனின் நூல் 40ம் அதிகாரம் 31ம் வசனமாகிய, "கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப் பெலன் அடைந்து, கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் களைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்து போகார்கள்" என்பதன் அடிப்படையில் தனது பேருரையை ஆற்றினார்.

இவ்வசனத்தை தனிப்பட்ட நபர்களின் பக்தி சம்பந்தமாகவே நாம் இதுவரை விளங்கியிருக்கிறோம்; ஆதியாகம நூலிலே கடவுளுடைய படைப்பையும், மனிதனை அவர் அழைத்த செயலையும் நாம் காணலாம். கடவுள் மனிதனைப் படைத்து இயற்கை அமைப்பின் ஒரு பாகமாக அவனை ஆக்கித், தோட்டம் ஒன்றினை அமைத்து அங்கே அவனை வாழும்படியாக வைத்தது மட்டுமன்று. அவன் பழகிப் பெருகி எல்லாஜீவஜந்துக்களையும் ஆளுகை செய்யும்படியும் அவனைப் பணித்தார். திருமறையின் இறுதி நூலாகிய வெளிப்படுத்தலின் விசேஷத்திலே காட்டப்படும் உண்மை யாதெனில், புதிய எருசலேம் எனும் நகரம் சரித்திரத்தின் இறுதியிலேயே தோன்றும். தேசத்தின் இராசாக்கள் தங்கள் பொக்கிஷங்களை அங்கு கொண்டு வருவார்கள் என்பதே. அதாவது கடவுளின் நகரம் என்பது மனித சரித்திரத்தின் முடிவாகும். இதுவே மனித ஜீவிய ஓட்டம். வரலாற்றை எழுதுவோர் முன்னேற்றத்தை அடிப்படையாக வைத்தே எழுதுவது மரபு. உதாரணமாக போக்குவரத்தை எடுத்து நோக்குமிடத்து கால்நடையாகச் சென்ற மனிதன் பின்னர் மிருகங்களில் சவாரி செய்தான். அதன் பின்பு வாகனங்கள், யந்திரங்களை உபயோகித்தான். இன்று விண்வெளிப் பயணத்தையே மேற்கொள்ளத் தொடங்கி விட்டான். சண்டைகள் யுத்தங்களை எடுத்துப் பார்க்கையிலே கற்களினாலே, தடிகளினாலே ஒருவரை ஒருவர் தாக்கிய மனிதர் காலப்போக்கில் அம்பு, வில், உலோக ஆயுதங்கள் என வளர்ச்சியடைந்து, பின்னர் துப்பாக்கி, வெடிமருந்து ஆகியவற்றினைக் கையாண்டவர்களாக இன்று அணுகுண்டினையே பயன்படுத்தும் நிலைக்கு வந்துவிட்டனர். இவ்விரு எடுத்துக்காட்டுகளும் நமக்குக் கொடுக்கும் பாடம் மனித வரலாறு என்பது முன்னேற்றத்தைக் காட்டும் ஒன்றே என்பது. எனவே பார்க்குமிடத்து மனிதன அறியாமையிலிருந்து அறிவுக்குள்ளும், மூடநம்பிக்கையிலிருந்து விஞ்ஞான அறிவுக்குள்ளும் வந்துவிட்டதையே இது உணர்த்துகிறது. எனவே மனித சரித்திரம் எனும் போது அது, "மனித முன்னேற்றத்தின் சரித்திரம்" (Story of human progrss) என்றே கூறக்கூடியதாயிருக்கிறது

சில மாதங்களுக்கு முன்னர் புதின அறிக்கைகளிலும், தொலைப் படக்காட்சியிலும் முக்கிய இடம் பெற்ற சம்பவம், எதியோப்பியா நாட்டிலே பசிபட்டினியால் ஆயிரக்கணக்கானோர் மடிந்ததும், மக்களில் பலர் ஆடைகளற்றோராய் எலும்புக் கூடுகளாய்க் காட்சியளித்த அத்துயரச் சம்பவமே. மக்கள் அலை அலையாக வெளிநாடுகளுக்குப்புறப்பட்டுப் போன நெஞ்சையுருக்கும் சம்பவமே அது ஆனல் அதேவேளையிலே இன்னுமொரு சம்பவமும் முக்கிய இடம்பெற்றதையும் நாம் மறத்தலாகாது அதுதான் அமெரிக்க நாட்டின் ஜனாதிபதியாகிய றேகன் வெளியிட்ட தனது புதிய கொள்கை பற்றிய அறிக்கை. தனது நாடு விண்வெளி யுத்தத்துக்கு எதற்கக ஆயத்தம் செய்ய வேண்டும் என்ற அறிக்கையே அது. இவையிரண்டும் 1985ம் ஆண்டில் நடைபெறும் சம்பவங்களே. ஒரு பக்கத்தில் வரட்சி, மக்களின் தவிப்பு. அதாவது மனித சரித்திரத்தின் தொடக்கத்தில் நடந்திருக்கக்கூடிய சம்பவமே அது. மறுபக்கத்திலே நேரெதிரான காட்சி. அதாவது விண்வெளி யுத்தத்திலீடுபடக் கருவிகளை ஆக்கிக் கொள்ளவும் சக்தியுடையவர்களாகத் தோன்றும் சம்பவம். இம் முன்னேற்றம் கொடுக்கும் முடிவு என்ன? புதிய எருசலேமுக்கு யாவரும் கொடை கொண்டு வரும் காட்சியோ இது? "வெண்ணெய் திரளும் வேளையிலே சட்டி உடைந்தது போன்று" என்று தமிழிலே காணப்படும் பழமொழி போன்றல்லவோ இது தெரிகின்றது!

இப்போது எமக்கு அபாயம் அதிகமாகியுள்ளது. கோடா கோடிப் பணம் விண்வெளி யுத்தத்துக்கு உண்டு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது போலில்லாது பிரயாண, விவசாய, மருத்துவ வசதிகள் எண்ணிறந்தவை நமக்கு உள்ளபோதிலும் மக்கள் தவித்து, மரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏன் ஏற்படுகின்றது? மனிதன் தனக்கே கொடுக்கப்பட்டுள்ள சக்திகளை எப்படிப் பாவிக்கின்றான்?

ஐரோப்பா மாநாடு ஒன்றில் குறிப்பிடப்பட்ட ஒரு பதம் "மனித முன்னேற்றம்" (Human Progress). இது மனிதனை நடுவே வைத்து, மனித விருப்பத்தை நிறைவேற்றுவதற்காகவே அமைகின்றது. ஏதேன் தோட்டத்திலே கடவுள் அனைத்தையும் நல்லதெனக் கண்டு கொண்டார், அதாவது "ஒத்தியங்கும் நிலை" (Harmony) ஒன்றினைக் கடவுள் உருவாக்கினார். ஆனல் மனிதனோ, கடவுள் இராச்சியத்தை உருவாக்கும் நிலையில் ஒற்றுமையைக் காத்து வருவதையிட்டு அழிவுக்கே வழி சமைக்கின்றவனாகி விட்டான். "தன்னை மையமாக வைத்த முன்னேற்றம்" ஆக இது மாறிவிட்டதன்றோ! கடவுள் கொடுத்த ஒழுங்கினை வளர்க்க, அதைப் பேண அவன் தன் சக்தியைப் பயன்படுத்தவில்லை. இந்த ஒழுங்கின்மையினித்தம் ஏற்படும் பிரச்சினைகளை ஒவ்வொரு இனம், சாதி, தேசம் ஆகியன மத்தியிலே நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

எமது நாட்டு நிலைமை இத்தகையதன்றோ! இந்தச் சூழ்நிலை, அதாவது ஒழுங்கைகள், வீதிகள் எங்கும் ஆயுதமேந்திய இளைஞர்கள் ஒருபுறம், அரசாங்கத்தின் இராணுவ ரீதியான நடைமுறை இன்னொருபுறம், மக்கள் கைதிகளாக்கப்படும் காட்சியும், மக்கள் கொலையுண்டு கிடக்கும் காட்சியும், குடிகள் வீடுகளை விட்டு அப்புறப்படுத்தப்படும், வீடுகள் அழிக்கப்பட்டு அகதிகளாக்கப்படும் காட்சியும் எப்போதுமே தெரிகின்றது. இந்நிலையிலே, கடவுள் கிரியை செய்கிறாரெனில், எப்படிக் கிரியை செய்கிறார்? கடவுள் சரித்திரத்திலே ஆளுகிறார் எனில் எப்படி ஆளுகிறார்? எனும் கேள்விகள் எழத்தான் செய்கின்றது. இதே கேள்விகளைத் தன் மக்கள் கேட்டதை அன்று ஏசாயா தீர்க்கன் கண்டு கொண்டார். இத்தகைய மக்களுக்கே ஏசாயா கூறினார், "பூமியின் கடையாந்தரங்களைச் சிருஷ்டித்த கர்த்தராகிய அநாதி தேவன் சோர்ந்து போவதுமில்லை, இளைப்படைவதுமில்லை; இதை நீ அறியாயோ? இதை நீ கேட்டதில்லையோ? அவருடைய புத்தி ஆராய்ந்து முடியாதது.'1 (ஏசாயா 40 ; 28)

"சோர்ந்து போகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப் பண்ணுகிறார்.', (ஏசாயா 40 : 29) கடவுள் எங்கே என்று கேட்ட நிலையில் இவ்வார்த்தை கூறப்படுகின்றது.

மனிதனின் ஏதேன் தோட்ட வாழ்க்கை, புனித நகரத்தை ஆக்கும் முன்னேற்றப் பணி ஆகிய இரு சம்பவங்களினதும் மையமாக அமைவது இஸ்ரவேல் சாதி பற்றிய வரலாறு. கடவுள் இஸ்ரவேலரைப் புறம்பான ஜாதியாகத் தெரிந்தெடுத்தார். மற்றோரிலிருந்து அவர்கள் பிரித்தெடுக்கப்பட்டார்கள். ஒரு நாட்டை அவர்கள் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள் எனும் வாக்குத் தத்தத்தையும் பெற்றுக்கொண்டார்கள். ஒருவரிடமிருந்து இன்னொருவரைப் பிரித்து அறிந்து கொள்வதற்கும். ஒருவரை அடையாளப் படுத்திக்கொள்வதற்குமே "பெயர்" (Name) கொடுக்கப்படுகின்றது. கடவுளும் இஸ்ரவேலரை அழைத்து "என் ஜனம்" (My people) எனக் கூறிக்கொண்டார்.

தென் அமெரிக்க நாடுகளிலேயே "விடுதலையின் இறையியல்" (Liberation Theology எனும் சிந்தனை உதித்தது. இவர்கள் முக்கியமாக வற்புறுத்திய ஒரு காரியம் யாதெனில், இஸ்ரவேலரது சரித்திரம் ஒரு "மாதிரியாக" (Paradigm) இருக்கிறது என்பதே. அதாவது விடுதலைப் போராட்டத்தினூடாக அவர்கள் ஒரு ஜாதியாக்கப்பட்டனர், சுயாதீன மக்களானார்கள். கடவுள் தம்முடைய மக்கள் சுயாதீனராக இருக்க வேண்டுமெனவே விரும்புகிறார். 'சொந்த நாடு வேண்டும்" எனும் அவாவே ஒவ்வொரு ஜனத்துக்குள்ளும் காணப்படுகின்றது. இதனூடாக மக்களுடைய தனித்துவம் அடையாளம் பேணப்படுகின்றது; ஆனல் சிலரோ. "நானும் எனது குடும்பமும் முன்னேற வெளிநாடுகளுக்குச் சென்று விடுவோம்" என எண்ணுகின்றனர். குடியேற்றத்துவ ஆசிக்குள்ளே வரும் பெரிய இழப்பு இதுவே அதாவது, சமூக சிந்தனையை மறந்து, சரித்திரத்திலே பந்த பெறும் உத்தரவாதத்தை மறந்து செயற்படுவது. இதுவே குடியேற்றவாதத்தின் ஒரு மாபெரும் தீமையாகும்

(தொடரும்)

---

சிறுவர் பூங்கா

### கல்லவாரி மேட்டினிலே!

கல்வாரி மேட்டினிலே — குருசு
நிமிர்ந்து நிற்குதடி
நல்மாரி பெய்த அண்ணல் — உடலம்
நடுவில் தொங்குதடி. 1

பக்கத்துக் கொடுவனைப் — பாங்காக
அறைந்து விட்டாரடி
பக்காத் திருடரவர் — தம்முடன்
அண்ணலைச் சேர்த்தாரடி. 2

கனி இதழ் திறந்து — வாக்கியம்
உரைத்து விட்டாரடி
தனிபேதை இவர்கள் — தந்தையே
மன்னியும் என்றாரடி. 3

அக்காலை ஒரு கள்வன் — இகழ்ந்து
தூஷித்து நின்றனடி
தக்கவன் மறுகள்வன் — வெகுண்டு
மன்னிப்புக் கேட்டானடி. 4

இக்காலை பரதீசில் — என்னுடன்
இருப்பாய் என்றாரடி
மிக்க மகிழ்வுடனே — அவனும்
பணிந்து நின்றனடி. 5

அன்னையைக் கண்டதுமே - யோவானே
வா என்று சொன்னாரடி
அன்னையே உந்தனுக்கு
— அம்மா உன்
மைந்தனே என்றாரடி. 6

என்னை நீர் கைவிட்டீரோ
— தேவனே
என்றுமே கேட்டாரடி
ஏசா நா வறளுதையா — என்றவர்
மொழிந்து நின்றாரடி. 7

முடிந்துவிட்ட தென்று — மன்னவன்
முழங்கி நின்றாரடி
பிடியுமென் ஆவி — தந்தையே
தந்தனன் என்றாரடி. 8

கல்லறை குலுங்கிடத் — தேவாலயத்
திரை கிழிந்ததடி
நல்லவர் மாண்டாரென்று — பூமாது
குலுங்கி நின்றாளடி 9

புத்தம் புதியதொரு — கல்லறை
தன்னிலே வைத்தாரடி
எத்தர்கள் கல்லறையைப் — பலமாய்க்
காவலும் செய்தாரடி 10

மூன்றும் நாள் காலையிலே — மன்னவன்
உயிர்த்து விட்டாரடி
முன்னணிக் காவலரும் — நடுங்கி
ஓடியே விட்டாரடி 11

காட்சி கொடுத்தாரடி — சீடர்க்கு
வாக்குக் கொடுத்தாரடி
சாட்சி கொடுங்களென்று — விண்ணகம்
ஏறியே சென்றாரடி. 12

— சென்னி

## நாம் பயப்படுவது ஏன்?

கீதாவின் கையைப் பிடித்துக் கொண்டு பள்ளிக்கூடவாசலை நெருங்கிய பாபு, சிறிது தயங்கினான். 'என்ன பாபு, ஏன் அழுகிறாய்?' — 'நான் பள்ளிக்கூடத்துக்கு போகலம்மா!'. 'இவ்வளவு தூரம் வந்துவிட்டுப் போக மாட்டேன்னு எப்படி பாபு? சும்மா குழப்படி பண்ணும வா' என்றாள் தாயார். ஆனால் பாபு எவ்வளவு சொல்லியும் கேட்கிற தாயில்லை. அவனைக் கட்டாயப்படுத்தி இழுத்துக்கொண்டு அவனுடைய வகுப்பறைக்குள் நுழைந்தாள் கீதா. அங்கு நுழைந்ததும் பாபுவின் முகம் மாறியது. தாயின் கைகளை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டான்.

'உள்ளே போ பாபு' என்று அவனைத் தள்ளினாள் கீதா. 'எனக்குப் பயமாக இருக்கம்மா, நான் போகமாட்டேன்' என்று அழ ஆரம்பித்தான் பாபு. ஒரு வழியாக அவனுக்குத் துணையாகத் தானும் இருப்பதாகக் கூறி, பாபுவை வகுப்புக்கு அனுப்பிவைத்தாள் கீதா. — ஆம், பாபுவைப் போல் இன்று எத்தனையோ குழந்தைகள் ஒருவித பயத்தால் பீடிக்கப்பட்டுள்ளனர். பயத்திற்கு குழந்தைகள் மட்டுமின்றி, பெரியவர்களும் அடிமையாகி விடுகின்றனர். இத்தகைய பயம், பயிற்சியினாலும் அனுபவத்தினாலும் ஏற்படுகிறது. பொதுவாகப் பயத்திற்கு இடங்கொடுக்கும் எவருமே, உடலாலும் உள்ளத்தாலும் பாதிக்கப்படுகிறார்கள். இது நம்முடைய சுகவாழ்வையும் மகிழ்ச்சியையும் குலைக்கக்கூடியது.

பயத்தினால் தமக்குள் ஏற்படும் போராட்டங்களின் விளைவு பலவகைகளில் வெளிப்படும். இதனால் அனேகருடைய சிந்தனைச் சக்தி தடைப்பட்டு அவர்களால் சரிவர செயல்பட முடியாமல் போகிறது. திடீரென்று பயம் தோன்றாது சிறுக சிறுக நம்மிடையே தோன்றி, நமக்குள்ளேயே பரவக்கூடியது. பயம் தோன்றுவதற்கு முன்னே அதைச் சிந்திப்பதுதான் இதற்குச் சிறந்த மருந்தாகும்.

விஜி, சிறுமியாக இருக்கும் போதே அவளுடைய அம்மா, இடி மின்னல் ஏற்படும்போது விஜியை இழுத்துக்கொண்டு அறைக்குள் சென்று கதவை மூடிக் கொள்வாள். தாயிடமிருந்து அந்தப் பயம் நாளடைவில் விஜியையும் பற்றிக்கொண்டது. விஜி, பெரியவளாக வளர வளர, தன்னுடைய பயம் கருத்தற்றது என்பதை உணர்ந்து கொண்டதுமல்லாமல், தன் பிள்ளைகளுக்கும் அதை சந்திக்கும் தைரியத்தை ஏற்படுத்தி வெற்றியும் கண்டாள்.

கிறிஸ்தவ பெற்றோர்களும், ஆசிரியர்களும் பிள்ளைகளிடம் தோன்றும் பயத்தை வளரவிடாமல தடுக்கமுடியும். அவர்களுடைய பயத்தைப் பற்றி அவர்களிடம் மனம் திறந்து பேசி, பயத்தைத் தெளியவைக்க வேண்டும்.

ராஜீ பள்ளிக்குச் செல்லும் வழியில் நிறைய மரங்கள் இருக்கும், அதிலிருந்து விழுந்து கிடக்கும் மஞ்சள் நிறமான பூக்களைப் பார்த்து, ராஜிக்கு அவளையறியாமலேயே ஒருவித பயம்! அந்தப் பூக்களை ஏதோ ஒருவித அருவருப்பான புழுக்கள் என்று நினைத்து அதைவிட்டு தள்ளி நடப்பாள். இதை ஒருநாள் கவனித்த அவள் தாய், அதன் காரணத்தைக் கேட்டறிந்து, அவளை அந்த மரத்தினிடம் அழைத்துச் சென்று, அவை புழுக்கள் அல்ல, அழகான பூக்கள் என்பதை அவனுக்கு விளக்கி அவளுடைய பயத்தைப் போக்கினாள்.

பெற்றோர், தம் பிள்ளைகள் புதிய அனுபவங்களைப் அவர்களைத் ஆயத்தப்படுத்த வேண்டியது அவசியம். பிள்ளைகளைக் கேலி செய்வதாலோ, அல்லது அதட்டுவதாலோ அவர்களுடைய பயத்தைப் போக்கலாம் என்று எண்ணுவது தவறு. ஏதாவது ஒன்றுக்குப் பயப்படும் குழந்தைகளை அவர்களின் பயத்தைத் தெளிய வைக்காமல், நம்முடைய செய்கைகளினாலும் பேச்சினாலும் அந்த பயத்தை மேலும் அதிகரித்து அவர்களை குழப்பத்தில் ஆழ்த்தக்கூடாது. அதுவே மனோதத்துவ ரீதியில் நாம் அவர்களுக்குச் செய்யும் உதவியாகும்.

பயம், உணர்ச்சிவசப்படக் கூடிய மற்றப் பிரச்சனைகளுடன் தொடர்பு கொண்டது. ஆராய்ச்சிகளின் மூலம் பார்க்கும் போது, பிளவுபட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்களும், உடலையில் பிரச்சனை உள்ளவர்களுமே இதற்கு அதிகமாக இடம் கொடுக்கின்றனர். பயத்தினால் பீடிக்கப்பட்டவர்களிடம அமைதியாக இருக்கச் சொல்வது முட்டாள்தனமாகும். பயத்தினால் பீடிக்கப்பட்டவர்களை, அவர்களின் உணர்ச்சிகளை மற்றவர்களிடம் மனம்விட்டுக் கூறும்படி உற்சாகப்படுத்தவேண்டும். அதைப்பற்றி மற்றவர்களிடம கூறுவதனால் பயத்திலிருந்து விடுவிப்பதற்கு வழி பிறக்கிறது. ஆனால், மனிதனின் வழிகள், அவனுடைய தேவைகளை முழுவதும பூர்த்தி செய்ய முடியாது. கடவுள் ஒருவர் தான் நம்முடைய தேவைகளை முழுவதுமாக அறிந்திருக்கிறார். அவைகளை சந்திப்பதற்கு மனிதனின் அறிவிற்கு எட்டாத பல வழிகளை ஏற்படுத்திக் கொடுக்கிறார்.

நாம் அனைவரும் பயங்கரமான கடலில், தலைவன் இல்லாத கப்பல்போல் சென்று கொண்டிருக்கிறோம். இதன் முடிவு நல்லதாகவும் இருக்கலாம். கடவுளிடம்தான் நம் பிரச்சனைகளுக்குப் பதில் கிடைக்கும். நம்முடைய பயம் நிறைந்த சூழ்நிலையிலிருந்து, நம்மை ஒவ்வொரு முறையும் தப்புவிக்கச் செய்யாவிட்டாலும் அந்த அனுபவங்களை நாம் சந்திக்கும்போது நம்மோடு அவர் இருக்கிறார்.

கடவுளை நம் மீட்பராக நம் மனதிலும், வாழ்க்கையிலும் ஏற்றுக்கொண்டால் எவ்விதப் பயத்திலிருந்தும் மீளமுடியும். நம்முடைய தேவையில்லாத அவசரமும் ஆவலும் நாளைய கவலையைப் போக்குவதற்குப் பதில் இன்றைய பலத்தை நம்மிடமிருந்து எடுத்துக் கொள்ளுகிறது.

எல்லா மனிதருக்கும் பொதுவாக இருக்கக்கூடிய மற்றொரு பயம் — மரணபயமாகும். இயேசு கிறிஸ்து மரணத்தை வென்றார் என்பதை நம்பியவர்களுக்கு இந்தப் பயம் நீங்கி, இறப்பிற்குப் பிறகு உள்ள வாழ்க்கை பிரகாசமாகவும், மகிழ்ச்சியாகவும் தோன்றும். கடவுள் நமக்கு அற்புதமான ஒரு வாக்குத் தத்தத்தைக் கொடுத்துள்ளார்.

'இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்' (மத். 28 : 20). நம்முடைய கவலைகளைக் கடவுளிடம் ஒப்படைத்து விட்டால், நம்முடைய மகிழ்ச்சிக்குக் குறைவொன்றுமிராது.

## செபிக்கும் கரங்கள்

படங்கள் விந்தாரிப்பதில் உலகப் பிரசித்தி பெற்ற அல்பிரேட்டு தியூரர் (Albrecht Durer) என்பவரின் "செபிக்கும் கரங்கள்" என்ற படத்தை அனேகருடைய வீடுகளில் நாம் காணலாம். மிகவும் சிறப்பு வாய்ந்த படம் என்று மக்கள் புகழுவார்கள். அதன் சிறப்பு என்ன? படத்தில் வரையப்பட்டிருக்கும் கரங்களைக் கண்டதும் தன்னை அறியாமலே ஒருவருக்குச் செபம் செய்யும் வாஞ்சை உண்டாகும் என்று நுண்கலைகளுக்கு விமரிசனம் கூறும் ஆராய்ச்சியாளர் ஒருவர் அப்படத்தைப் பற்றி கூறியுள்ளார். அக்கூற்று மிகவும் பொருத்தமானதே.

ஆழ்ந்து சிந்திப்போமானால் இந்தப் படம் செபத்தின் அடிப்படையான கருத்தை எமக்கு விளக்கிக் காட்டுகிறதென்பதை நாம் உணர்வோம். அக்கரங்களை உற்றுநோக்குவோமாகில் அவைகள் மிகவும் பாடுபட்டு வேலை செய்த கரங்கள் என்பது நமக்குப் புலப்படும். விரல்கள் காய்த்துப் போயிருக்கின்றன. நரம்புகள் மிதந்திருக்கின்றன. தோல் முரண்பட்டிருக்கின்றது. இதற்கு மாறுபாடாக சொகுசான சீவியம் செய்தவருடைய கைகள் அல்லது சோம்பேறிகளுடைய கைகள் மென்மையாகவே இருக்கும். வேலை செய்யும் கரங்களே உண்மையான செபத்தைச் செய்ய முடியுமென்று தியூரர் இந்தப் படத்தினால் நமக்கு விளக்கிக் காட்டுகிறார்.

தியூரருக்கு, பிராங்கு (Frank) என்ற ஒரு நண்பர் இருந்தார். அவருக்கும் தியூரரைப் போலவே படங்கள் விந்தாரிப்பதில் பெரும் ஆர்வமுண்டு. ஆனால் தியூரரைப் போல் ஆற்றல் படைத்தவர் அல்லர். நண்பர்கள் இருவரும் ஒரு நாள் "இயேசுவின் பாடுகள்" என்ற பொருள் பற்றித் தனித்தனியே தங்கள் தங்கள் மனோபாவனைகளுக்குத் தகுந்தபடி படங்கள் வரைந்தார்கள். முடிவில் பிராங்கின் படம் அவ்வளவு நன்றாக வரவில்லை. அவர் மனம் சலித்தவராய் கைகளைக் கூப்பிச் செபித்தார். செபம் முடிந்ததும், தியூரர் பிராங்கை நோக்கி "பிராங், உன் கரங்களை எடுத்துப் போடாதே, சில நிமிடங்களுக்கு அப்படியே வைத்துக்கொள்" என்று கூறி பிராங்கின் கரங்களை விரைவாக வரைந்தார். அந்தப் படம்தான் ஏறத்தாழ 500 ஆண்டுகளுக்குப் பின்னரும் மக்களின் உள்ளங்களைக் கவர்ந்து கொண்டிருக்கிறது.

பிராங்குக்கு படம் விந்தாரிக்கும் ஆற்றல் இல்லாவிட்டாலும் இன்றும் அவருடைய செபிக்கும் கரங்கள் ஒரு மகத்தான செய்தியை நமக்குக் கூறிக்கொண்டிருக்கின்றன. "உழையுங்கள், செபியுங்கள்" என்பதே அந்தச் செய்தி. எம்மில் அனேகருக்கு தனிப்பட்ட ஆற்றல்கள் இல்லாவிட்டாலும் எம்மைப் படைத்த பிதா தம் பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் நாம் அயலாருக்குச் செய்யவேண்டிய சேவைகளைக் காட்டி வருகிறார். அச்சேவையை செபத்துடனும் தாழ்மையுடனும், கீழ்படிவுடனும் செய்வோமாகில் நாமும் பிராங்கைப்போல் பாக்கிய சாலிகளாவோம் என்பது நிச்சயம்.

— A. இராமநாதன்

---

'கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர், யாருக்குப் பயப்படுவேன்? கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர், யாருக்கு அஞ்சுவேன்?' (சங். 27 : 1). தகப்பனின் கைகளைப் பிடித்து அவர் பின்னால் நம்பிக்கையுடன் செல்லும் குழந்தைகளைப்போல், கிறிஸ்தவர்களாகிய நாமும், நம்முடைய துன்ப நேரத்திலும், பயங்கரமான சூழ்நிலையிலும் கடவுள் வழி நடத்துவார் என்ற நம்பிக்கையுடன் இருக்கவேண்டும். அவர் மேல் நம்பிக்கை வைப்பதால், நம்முடைய பயம் நம்மைவிட்டு நீங்குகிறது. அதிலிருந்து மீண்டு வருவதற்கு அவர் உதவி செய்வார்.

நம்முடைய காரியங்கள் முழுவதையும் கடவுளுக்கு ஒப்புக்கொடுத்து, இடைவிடாமல் செபம் செய்து, அவருடைய வார்த்தைகளை ஏற்றுக்கொண்டு, அதன்படி நடந்தால், பயத்திலிருந்து விடுதலை அடைவோம்.

'தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும், அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியைக் கொடுத்திருக்கிறார்'

— (2 தீமோ. 1 : 7)

— M. C.

---

## இறைவனின் வாக்கு

உம் வாக்குகள் சுவைக்கு எவ்வளவு இனிமையாயுள்ளன! என் வாய்க்குத் தேனிலும் சுவை மிகுந்தவையே.

உம் கட்டளைகளால் நான் அறிவுள்ளவனாகின்றேன். ஆகவே தான் தீமையான பாதை எதையும் வெறுக்கிறேன்.

நான் நடக்கவேண்டிய பாதையைக் காட்டும் விளக்கு உம் வார்த்தை: செல்லும் வழிக்கு வெளிச்சமும் அதுவே.

— (சங். 119 : 103-105)

---

## இறந்து எழுந்த கிறிஸ்து

இயேசுவானவர் பிறந்த நோக்கம் சிலுவை மரணத்தின் மூலமும் நிறைவேறியது. அவர் உயிர்த்தெழா விட்டால், அவர் உலகத்திற்கு வந்த நோக்கம் நிறைவேறியிராது, நாம் இறந்த இயேசுவையல்ல, இறந்து உயிர்தெழுந்த இயேசுவையே இரட்சகராக ஏற்றுக் கொள்ளுகிறோம்;

மகதலேனா மரியாள் இயேசுவைக்காண ஆசைப்பட்டுக் கல்லறைத் தோட்டத்திற்குப் போனாள். கல்லறை வெறுமையாயிருந்தது. உயிர்த்தெழுந்த ஆண்டவர் அவள் பக்கத்தல் நின்றார். ஆனால் அவளோ அவரைக் காணவில்லை. ஏனெனில் அவள் உயிர்த்தெழுந்த இயேசுவையல்ல. இறந்த இயேசுவையே தேடினாள். எங்களிற் பலர் இந்நாட்களில் அவளின் நிலையில் இருக்கிறோம், நாம் ஆலயங்களில் கூடி ஆராதனைகளில் பங்கெடுத்து அவருக்கருகாமையில் இருந்த பொழுதிலும், அவரை நேரில் சந்திக்கத்தவறி விடுகிறோம். உயிர்த்தெழுந்த ஆண்டவரே உலகத்தின் இரட்சகர். அவரையே நாம் தேடிக் கண்டடைய வேண்டும்.

உயிர்த்தெழுந்த கிறிஸ்து நமக்கு ஒரு கட்டளை கொடுக்கிறார். பூமியின் கடைசி பரியந்தம் தனக்குச் சாட்சிகளாய் இருக்கும்படி அவர் எங்களை அன்புடன் அழைக்கிறார். இத்திருப்பணியில் ஈடுபட்டு, அவரை உலகத்திற்கு அறிவிப்போமாக.

"கிறிஸ்து எழுந்திராவிட்டால் உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும்"

— J. P. அரைரத்னம்

## "Let Justice Roll Down as the Waters........"

by

by Harold H. Wilke

[This text is a slightly edited version of an Address delivered by Rev. (Dr.) Harold W. Wilke at a UN Colloquium on the integration of handicapped and alienated people. Dr. Wilke had the disability of being armless. — *Ed.*]

I come before you this morning as a person who represents a religious community. Furthermore I'm before you today not as one person but three. (We're all slightly schizoid, of course, and that reflects our human condition). The three persons I represent today are first, the one whom you see immediately on meeting me namely, a person with a "disability". My second position is that of a clergyman. My third is simply that of a representative of society — a citizen, a family man, a worker and all the rest that goes with being a part of society. All three persons are speaking this morning.

First then, I speak as a person with a disability. But I want to be seen in terms of the wholeness which is mine inspite of the presence of a disability and I want to be accepted wholly. My emphasis needs to be on this wholeness which is before all of us.

When I think of an emphasis, I'm reminded of a time at a Church I served in the Chicago area where there were strangers in Church every Sunday. I'm ordained in the United Church of Christ. In that heritage, most ministers wear the pulpit robe which hides the empty sleeves and of course I don't do anything in the pulpit which would draw attention to the fact of my particular disability. Strangers therefore cannot tell that the Minister of this Church happens to have a disability.

So, one morning at the conclusion of the service a stranger noted that the three or four persons in front of him did not shake hands with me as I greeted the congregation in the vestibule after the service. Taking his cue from that, he did not offer to shake hands either.

But as soon as he got outside, he turned to one of the members and said "Is your minister so aloof, so stuck-up, that he, would not even shake hands with you Whereupon my church member who had long since forgotten my disability said ' Well, you must remember that our Minister does not have hands and therefore obviously he would not be shaking hands with you The stranger scratched his head reflectively and said ' you know I did notice that he wasn't pounding the pulpit so much'.

Well I'm pounding the pulpit — the lectern — this morning insisting on that wholeness which characterises the life of all persons with disabilities and handicaps (which all of us bear in one way or another), the wholeness from a religious point of view that is imputed by the Lord, a wholeness that exists for each one of us.

I also recognise that my identity derives not only from that kind of wholeness My wholeness also has to do with representing today some 450 million persons around the world along with the participants in this programme,

Who are these 450 million? One sixth of them are congenitally disabled persons. The causes of many of their disabilities - amputation or cerebral palsy or retardation or others — are not really known In some cases we recognise the enormous impact of nutritional loss during the time that the baby is in the womb.

Then there is the vast number — five-sixths of the 450 million — whose disability is acquired later in life. Several hundred thousands of persons per day are injured through war or sports industrial or home accidents or alcohol abuse. Seven and a half million people annually die in automobile accidents and proportionately a much larger number of those in such crashes are left with disabilities that will last for the rest of their lives.

Their handicap and the handicap of this representative individual, myself, is also a *handicap of attitudinal barriers, that barriars that society puts befor us and upon us and behind us and underneath us*, the barriers that say " you're not a whole person, merely one who needs our pity or our special help. We can look down upon you as we provide you this special help!

I want to be accepted! I am grateful for my own luck in being accepted within the community around the world. Yet this acceptance does not exist for a great many of those 450 million persons.

Now for my second person. I speak now as a clergyman, one of that vast number of ordained persons in various religious organisations and groups and faiths round the world.

I feel that that it is important for us to see the ways that the church, the mosque, the temple and the various religious faiths say something to the human condition and particularly to that human condition of disability. It's ironic that sometimes, nay often, religion is used as a buttress for looking down upon other persons. There are major sections of various scriptures that deny the wholeness of an individual with a disability.

Beyond this, however is the actual living out of the scriptures by the adherents of these various faiths who say (reflecting of course, what is true for so much of society) that it is because there has been some major sin or evil in your life that you were born with a disability or that you acquired a disability.

It is this sin connection that we now must abjure Out of the Hebraic — Christian tradition which is my own, we can look at two persons Job and Jesus

In the Book of Job can be seen the tremendous religious and societal pressure of that time to find a cause for Job's troubles Surely his troubles had to be because Job had done something evil in his life Yet at the end, we hear the answer of God: We do know that sin has nothing to do with it.

We hear the same thing in the words of Jesus When Jesus' disciples brought to him a man who had been born blind, Jesus' statement was a flat denial that sin had anything to do with this disability.

It is imperative that we proclaim from the deepest possible religious base the rights of handicapped persons and their participation within the wholeness of society.

It is from the religious tradition that we hear the words, "*Let justice roll down as waters and righteousness as a mighty stream.* It is our duty to destroy this evil of "handicapism" (that is related to the evils of racism and sexism) that says that there is something inherently wrong, evil and sinful, whether from the point of view of our secular society or from a religious point of view in being a person with a handicap

### Jaffna College Alumni — Singapore and Malaysia

The Principal of Jaffna College and Mrs. Kadirgamar made a goodwill tour of Malaysia and Singapore meeting as many alumni as possible. Besides meeting alumni in their homes and in several small groups, there were two large gatherings — one in Petaling Jaya and one in Singapore. The alumni dinner in Petaling Jaya was organised by Mr. S Rathichandran and Dr. S. Durai Raja Singam and about forty were present. Speeches were made by Mr. Rathichandran, the chairman, Dr. Durai Raja Singam, Messers T. Thanendran, K. Nagarajah and M. Rajasingam. The gathering in Petaling Jeya included some of the outstanding men in Malaysia. The President of the Malaysian Medical Association and the King's physician being Dr. K. Sarvananthan; the Director of Postal Services, Mr. M. Rajasingham; Mr. S. Rathichandran is a senior lecturer at the Mara Institute of Technology and Dr S. Durai Raja Singam, a very outstanding scholar and author.

Alumni in Singapore met at the Ceylon Sports Club and more than sixty were present. The Dinner was presided over by Mr. Justic A. P. Rajah, a former Malaysian High Commissioner for England and Speaker of the Singapore Parliament; another senior member of the Singapore alumni is Mr. S. M. Vasagar, former Mayor of Singapore. The dinner was organised by Mr. G. Gnanachandran; chaired by Mr. S. Ratnakumar, Engineer and the main speech made by Just A. P. Rajah.

Mr. & Mrs. Kadirgamar also visited some of the older members of the Alumni Association in their homes.

Alumni in Singapore and Malaysia are very concerned about the progress of the institution and the situation in Jaffna. They have whole heartedly agreed to contribute to the K. A. Selliah Memorial Foundation. The Principal was also able to circulate two video films on the activities in the college.

Mr. and Mrs. Kadirgamar also took the opportunity to visit a host of friends and were guests of honour at the opening sessions of the Methodist Conferences of Singapore and later in Malaysia. They were also present at the consecration service of the new Bishop of Singapore. The Principal also took the opportunity to visit the National University and the Regional English Language Centre of Singapore.

*Christian Conference of Asia*

### Consulation on Peace, Okinawa, Japan

The above conference was organised in Okinawa entitled — 'Okinawa — Heiwa (Peace) Conference organised by the Christian Conference of Asia.

Mr. G. Rajanayagam, of the staff of Jaffna College was selected along with two others — Mrs. Nimala and Mr. Newton Perera by the National Christian Council of Sri Lanka to attend this conference. The Conference was held from February 18th to 24th. There were 93 delegates from about 19 countries in Asia.

The general consensus of opinion was that attempts should be made to bring about a peacefu solution to the many problems in the Asian countries. The topic of peace and justice is holding the intense attention of the Christian Conference of Asia and World Council of Churches and several consultations are held on this topic nationally and internationally.

### You can't end terrorism by killing terrorists

You cannot put an end to terrorism by killing terrorists. Counter terrorism is no counter to terrorism. If society as whole is prepared to pay a price, then terrorism can be defeated. A strong society combined with firm action by the government is the answer to terrorism. There is no cheap way to eradicate it. First the roots of terrorism must be dealt with.

These are some of the points made by Professor Ralph Buultjens, the Orwellian Big Brother of India and Professor of Philosophical Sciences of New York University, at the second of his public lectures arranged by the Institute of Fundamental Studies on 12-3-85.

The subject of his entertaining and enlightening lecture was Terrorism in History — Politics and Fear. Presiding over it was his colleague Professor Cyril Ponnamperuma.

*EDITORIAL*

## The Easter Feeling!

Robin Gurney, a Methodist layman, an Editor of the *Ecumenical Press Service*, in a Bible Study has made a significant comment.

He has said that to him if there is one verse in the gospel stories of the Resurrection, which epitomises the whole Easter story it is those words in Mathew XVIII, 7— "*Go Quickly and tell the disciples that he is risen from the dead*".

The Easter feeling is one of urgency and excitement that Christ is *risen* and that no longer man need fear man. It is said that in the age of Jesus there was a great tension between the people of Galilee and the religious leadership in Jerusalem. The masses of the people in Galilee were too poor to keep the finer points of the rabbinic law. Consequently they were looked down as 'sinners'.

Jesus' condemnation of the Temple seems to indicate that he was reflecting the deep sentiment of the people of his time. 'Sinners' included not only those who broke the law of God but even those in "dishonourable" occupations as shepherds who broke the sabbath, and those engaged in 'unclean occupations' as leather-makers and even the physically hadicapped because such handicap was the result of God's "absence" rather than an active blessing.

It was under such historical circumstances that Jesus began his preaching of the gospel on the shores of the Galilean Sea. He came, as a writer puts it, from the "hinterland of history" and it was in this 'hiterland' of Galilee, in the shadow of oppression and under the pressure of injustices that the people received the message of liberation.

Jesus was not always prudent (or discreet as we would say) in his utterances condemning the value orientation of the middle class "good people" of his time. It was always clear how and by whom Jesus was brought to death on the cross. He was put to death by the power structures of the day. The people knew why he was hanging on the Cross. Even a centurion who was nearby confessed:— "Truly this man was a son of God".

After the Resurrection, the gospel story tells us that Jesus left Jerusalem and went ahead of his disciples to Galilee where he started his gospel of liberation among the poor and the sinners.

The miracle of the Resurrection therefore signifies to the Christian that he cannot live in a world of neutrality and escapism. His world is built around a crucified and risen Christ.

We see the resurrected Christ today in the "refugee" writhing from decrees that come unexplained and unexplainable, yet delivering the defiant message that 'life must be more'.

We see the resurrected Christ in the Prisoner of Conscience held behind bars witnessing to the justice he still believes in.

We see the resurrected Christ in many lives scarred by the 'survivor syndrome'—chronic anxiety, flattened emotions and recurring night mares—yet reflecting Robert Browning's words "*our times are in His kand who said a whole I planned. Youth shows but half: trust God See all nor be afraid*".

We see the resurrected Christ in the lives of all men and women all over the world waging a bitter struggle against super-powers who are spending "one million US dollars a minute on weapons of war" when two-thirds of the world's four billion people suffer from malnutrition.

It is this simple joyous message embodied in Charles Wesley's *Easter Hymn* which expresses the Easter Feeling:—

Soar we now where Christ has led
Following our exalted Head
Made like him, like him we rise
Ours the cross, the grave, the Skies
Allelujah!

---

### Felicitations and Congratulations

**Bishop Oswald Gomis,** Vicar-General and Auxiliary Bishop of the Archdiocese of Colombo has been awarded an Honorary Ph. D. by the *Fu Jen* University of Taiwan for his outstanding contribution in the field of Social Communications in Asia for fourteen years and in particular for work done in charge of Radio Veritas. As Executive Chairman of the FABC Commission he has had the longest record of service.

Bishop Gomis has also served in the Sinhala Bible Revision Committee. We congratulate the Bishop on the literary award bestowed on him.

**The Revd. Canon R. S. de Saram,** Warden Emeritus of St. Thomas College, Mt. Lavinia celebrated the 50th Anniversary of his ordination to the priesthood recently with a special service held at the S. T. C, Chapel of the Transfiguration.

A Felicitation volume was presented to Canon de Saram by Mr. E. G. Wickremanayake Q. C., on the occasion of his 87th birthday which fell on 11-3-85. The Volume compiled by Mr. Mervyn Cassie Chetty contains articles from various newspapers about the Rev. R. S. de Saram during his tenure as Warden of St. Thomas College.

---

*Lenten Thought*

## Jesus sets Free to Serve the Oppressed Today

The institutional Church has had a long history of ministry to the world through a wide range of institutions and services hospitals, schools and care for the destitute being good examples. In the seventeenth and eighteenth centuries and in the wake of the French Revolution a movement began which deliberately relieved the Church of much that had remained a Church monopoly. The result of this process in history is the concept of the welfare state as prevailing in many western nations today; the major forms of social service which for centuries had been carried on by the Church have been very largely taken out of the hands of the Church and are carried on by the state. Yet in many countries in Asia and Africa the Church continues its traditional service ministries alongside state institutions. Despite these pioneering efforts of the Church in many Countries and the examples of sacrificial service, these forms of social service are now regarded as being inadequate in terms of the needs of morden societies.

The oppressed peoples in many post—independent nations of Asia have been largely betrayed by their political leaders and are still trapped in the dependent socio—political systems created by them and are the victims of exploitation at the hands of foreign capital and Trans National Corporations. True freedom, sovereighty and economic independence have yet to be realised. The slogans of welfare, service and in more recent times development have all been manipulated by ruling elites to serve their own interests and these of their foreign masters within a framework of neo—colonialism. Furthermore in several Asian countries the masses of the people groan under the weight of authoritarian regimes and military dictatorships. The economic systems created have denied masses of working people the fruits of their labour ownership of lands and workplaces, and the right to be subjects of their own future. Chronic poverty, inequality and powerlessness are the pervasive factors in the life of the oppressed peoples of Asia. This reality of an oppressive social system finds its support, sanction and legitimacy in the political system and the state. The growing centralised and military power in many Asian States is a dangerous trend against ehich people everywhere are struggling to be free. This struggle of the people is often diverted and distorted by the use of a State ideology.

By ideology we refer to a system of ideas and values that determine the pattern of behaviour of a people. Through a monopoly of information and of the Mass Media, ruling elites — including very often religious leaders — effectively condition and colonise the minds of people with ancient and modern myths and slogans (e. g. racial superiority, anticommunism, etc). The enemy mentality is actively fostered (this is very easilydeveloped in times of war in terms of a war psychosis) and people from all walks of life, inculding leading intellectuals are ensnared and lose their freedom and critical faculties. This is the context in Asia in which true freedom and liberation in Christ has to be witnessed to.

Serving one another — taking the form of a bond — servant ("doulos) has to be interpreted in this context as a self — emptying, self — giving incarnation in the midst of the people's struggle. The servants of the new order or age cannot be content with development or social seryice which dehumanises people and is handed out from above. Rather they are challenged to struggle and suffer with the oppressed in peoples organizations where people are subjects of their own destiny. Those from the middle and upper classes who make such a class option and de — class themselves have thereafter no rights — They are at the mercy of the oppressed and belong to them in one fraternity. Such an immersion in the struggles of people for full freedom has deep implications for us in terms of life styles, decision — making and belonging — ness. In the midst of a common suffering mutual service of one anotner takes place with — the growth of awareness in peosle's movements. Thus there develops an alternative and transforming consciousness of peoples power in the face of a dominant ideology. The alternative to the dominate community becomes the servant community with a new understanding of authority, and the growth of collective leadership based on real solidarity and mutual love and service. (Mark. 10 : 42 - 45).

The example set by Jesus in washing the feet of his disciples was precisely in order to develop this type of collective consciousness and solidarity among his disciples.......... Then if I, your Lord and Master, have washed your feet, you also outht to wash one another's feet......... (John. 13 : 12 - 17).

The feet washing action is not only a symbolic act but a challenge to a new style of life rooted in equality brotherhood and sisterhood. "In very truth I tell you, a servant is not greater than his Master, nor a messenger than the one who sent him. *If you know this, happy are you if you act upon it*".

Rev. S. K. Kadirgamar
Methodist Church,
Kaddaively,
Karaveddy.
20-2-85

---

*Registered as a Newspaper at the G.P.O., Sri Lanka under No. Q/J/29/News/85.*

Printed for the Jaffna Diocese of the Church of South India at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna on Friday, 5th April 1985 and published by Mr. Alvappillai Rajasingham, 330, Navalar Road, Jaffna.